# ECONOMICS

## TNUSRB - SUB INSPECTOR 2023

## SCHOOL BOOK CRAFTED MATERIAL
## ECONOMIC BOOK PIC 6 TO 12
## BOX INFORAMATION




STAR POLICE ACADEMY

N0. 1 POLICE ACADEMY IN TAMIL NADU

Mob : 93634 59430, 75399 89555

www. starpoliceacademy.in

உயர்சிந்தனை வினா:

பணம் என்பதே உலகில் இல்லையென்றால் – கற்பனை செய்.

**நுகர்வோர் பொருட்கள்**

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன. (எ.கா) அரிசி, துணிகள், மிதிவண்டிகள் போன்றவை.

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். –குறள்: 0479

**விளக்கம்:** தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

## முதல் நிலைத் தொழில்கள்

உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.

- வேளாண்மை
- கால்நடைகள் வளர்த்தல்
- மீன் பிடித்தல்
- கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்.
- கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல், மரம் வெட்டுதல்.





## இரண்டாம் நிலைத் தொழில்கள்

முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

### மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்.

- வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் – பருத்தி, சர்க்கரை, உணவுபதப்படுத்துதல்.
- காடுசார்ந்த தொழிற்சாலைகள் – காகிதத்தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்.
- கனிமத் தொழிற்சாலைகள் – சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்.
- கடல்சார் தொழிற்சாலைகள் – கடல் உணவு பதப்படுத்துதல்.






## மூன்றாம் நிலைத் தொழில்கள்

முன்னர் கூறிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்.
- தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல் தொழில்நுட்பம்.
- வர்த்தகம் – பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல்.
- வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்.






**பயன்பாட்டின் வகைகள்**

**வடிவப் பயன்பாடு**

பருத்தி



ஆடைகள்



ஒரு விளைபொருளின் வடிவம் மாற்றப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளாகிய பருத்தியைக்கொண்டு ஆடைகள் உருவாக்கப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் உயர்கின்றன.

**இடப்பயன்பாடு**

போக்குவரத்து



ஒரு விளைபொருள், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளான அரிசி தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் கொண்டு செல்லப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் அதிகரிக்கின்றன.

**காலப் பயன்பாடு**

சேமிப்புக் கிடங்கு



ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கும்போது, அதன் பயன்பாடு மிகுகிறது.

எடுத்துக்காட்டாக, நுகர்வோர்களால் ஆண்டு முழுவதும் பயன்படுத்தக்கூடிய உணவுப் பயிர்களான நெல், கோதுமை போன்றவற்றைச் சேமித்து வைப்பதால், அவற்றின் தேவையும் பயன்பாடும் மிகுதியாகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

நம் இந்தியாவில் கலப்பு பொருளாதார நிலை காணப்படுகிறது.அதாவது, பொருளாதாரத்தில் தனியார் துறை நிறுவனங்களும் பொதுத் துறை நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன.

உங்களுக்குத் தெரியுமா?

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பெரும்பங்கு வகிப்பவை மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை உற்பத்திகளே.

**எடுத்துக்காட்டு**

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உற்பத்தி

- **பருத்தி** (முதன்மைத் துறை) – பருத்தித் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) =ஆடை உற்பத்தி
- **இரும்புத்தாது** (முதன்மைத் துறை) – இரும்புத் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) = பொருள் தயாரிப்பு
- **கோதுமைமாவு** (முதன்மைத் துறை)– ரொட்டித் தொழிற்சாலை = உணவு உற்பத்தி (இரண்டாம் நிலை உற்பத்தி)

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு

– திருவள்ளுவர்

"சூரியன், தான் பூமியிடமிருந்து உறிஞ்சிய ஈரப்பதத்தைப் பன்மடங்கு திருப்பித் தருகிறது. அதுபோல, மன்னன் தன் குடிமக்களிடம் வரி வசூலித்து, அவர்களின் நலத்திற்காகவே மீண்டும் செலவு செய்கிறான்."

- காளிதாஸ்

குறிப்பிட்ட நிலப்பகுதி அமைந்துள்ள இடத்தில் கிடைக்கும் வளங்களைப் பொருத்து, நிலத்தின் வடிவம் மாற்றமடைகிறது. எடுத்துக்காட்டாக, வேளாண்மை செய்யும்போது, விளைநிலமாகவும் மனை விற்பனை செய்யும்போது, வீட்டு நிலமாகவும் மாறுகிறது.

**உற்பத்திக்கான காரணிகள்**

- நிலம்
- உழைப்பு
- மூலதனம்
- தொழில் முனைவோர்

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆடம்ஸ்மித் "பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுகிறார். இவரது கோட்பாடு, செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட 'செல்வ இலக்கணம் ஆகும்.' நன்னெறி கருத்துக் உணர்வுக் கொள்கை," நாடுகளின் செல்வமும், அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் ஓர் ஆய்வு" (1776) என்பன, அவரின் சிறந்த இரு படைப்பு நூல்கள்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மத்திய வருமானச் சட்டம் 1963இன்கீழ் 'நேர்முக வரிகளுக்கான மத்திய வருவாய் வாரியம்' என்னும் பெயரில் தனி வாரியம் (CBDT) ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

**ஆடம் ஸ்மித்தின் நால்வகையான வரிவிதிப்புக் கோட்பாடுகள்**

1. சமத்துவ விதி
2. உறுதிப்பாட்டு விதி
3. வசதி விதி
4. சிக்கன விதி



**உங்களுக்குத் தெரியுமா?**

**பணத்தின் (ரூபாய்) குறியீடு**

₹

இந்திய ரூபாய் குறியீடு தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த திரு. உதயகுமார் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது 15–ஜூலை –2010 அன்று இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**சுங்க வரியும் சாலை வரியும்**



அரசால் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை நாம் அடிக்கடி பயன்படுத்துகிறோம். அதற்காக விதிக்கப்படும் வரி, சுங்கம் மற்றும் சாலை வரிகளாகும். எடுத்துக்காட்டாக, நாம் பயன்படுத்தும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவற்றைக் கூறலாம். சாலை/பாலம் வசதிகளின் பராமரிப்புப் பணிக்காகவும் குறிப்பிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும் இவ்வரிகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன.

**தூய்மை பாரத வரி**



இந்திய அரசால் இவ்வரி விதிக்கப்படுகிறது. தூய்மை பாரதத்தின் பெயரால் வசூலிக்கப்படும் இவ்வரி, 2015ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 15ஆம் நாள் தொடங்கப்பட்டது. இஃது அனைத்து வகையான வரிச் சேவைகளுக்கும் பொருந்தும். இதன் வரி விகிதம் 0.5% ஆகும். தற்போது, 14% க்கும் மேற்பட்ட சேவை வரி நடைமுறையில் உள்ளது.

| நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|
| வரி செலுத்துவோர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. | ஒருவர், தமக்கு விதிக்கப்பட்ட வரிச்சுமையை மிக எளிதாக வேறொருவருக்கு மாற்ற இயலும். |
| தனியாள் மற்றும் நிறுவனங்கள் பெறும் வருமானங்கள்மீது வரி விதிக்கப்படுகிறது. | பல்வேறு பொருள் மற்றும் சேவைகளின் மீது வரி விதிக்கப்படுகிறது. |
| பணவீக்க அழுத்தம் இல்லை | பணவீக்க அழுத்தம் உண்டு |
| வரித் தாக்கமும் வரி நிகழ்வும் சமமாக உள்ளன. | வரித் தாக்கமும் வரி நிகழ்வும் வெவ்வேறாக உள்ளன. |
| நெகிழ்வுத் தன்மை குறைவு. | நெகிழ்வுத்தன்மை அதிகம். |

**சிந்தனை**

பணம் ஒன்று கண்டறியப்படவில்லையெனில் – கற்பனை செய்.

**பணவீக்கம் மற்றும் பணவாட்டம்**

- பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து, பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவதையும் குறிக்கும்.
- பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

கலப்பு பொருளாதாரம் என்பது முதலாளித்துவம் மற்றும் பொதுவுடமையின் கலவையாகும்.

**நிதி ஆயோக்**



நிதி ஆயோக்

- நிதி ஆயோக் என்பது 65 ஆண்டுகள் பழமையான திட்டக் குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்ட குழுவாகும். அமைச்சகங்களுக்கும், மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்க திட்டக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது. ஆனால் இந்த அதிகாரம் தற்போது நிதி அமைச்சகத்தின் கீழ் உள்ளது.
- நிதி ஆயோக் அடிப்படையில் ஒரு மதியுரையகக் குழுவாகவும் உண்மையான ஆலோசனைக் குழுவாகவும் 2015 ஜனவரி 1ஆம் தேதியிலிருந்து செயல்பட துவங்கியுள்ளது.

**பணம் மதிப்பிழப்பு**

2016 நவம்பர் 8 ஆம் தேதி இந்தியாவில் இந்திய அரசாங்கம் கருப்பு பணத்திற்கு எதிராக அனைத்து ரூ 500 மற்றும் ரூ 1000 நோட்டுக்களை பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தது.

இந்திய இரயில்வேயானது அதிக அளவில் பணியாளர்களைக் கொண்ட பொதுத்துறை நிறுவனமாகும்.

## ஒன்பது வகையான பொதுத்துறைகள்




**உங்களுக்குத் தெரியுமா?**

நவரத்னா என்ற சொல் ஒன்பது விலைமதிப்பற்ற ரத்தினங்களைக் குறிக்கிறது. இது பின்னர், குப்த பேரரசர் விக்ரமாதித்யன் மற்றும் முகலாய பேரரசர் அக்பர் ஆகியோரின் அவையில் இச்சொல்லானது ஒன்பது அறிஞர்களை குறிப்பிடுவதாக அமைந்தது.

**உங்களுக்குத் தெரியுமா?**

### தலா வருமானம்

உலக வங்கியின் அறிக்கையின்படி, நாடுகளின் வருமான அளவீடுகள் கீழ்க்கண்டவாறு புதியதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது (2017–18)

| வ. எண் | நாடுகளின் வகைகள் | தலா வருமானம் (அமெரிக்க டாலரில்) |
|---|---|---|
| 1 | குறைந்த வருவாய் | < 1005 |
| 2 | குறைந்த நடுத்தர வருவாய் | 1006–3955 |
| 3 | உயர் நடுத்தர வருவாய் | 3956–12,235 |
| 4 | உயர்ந்த வருவாய் | > 12,235 |

ஆதாரம்: www.worldbank.org

முதன்மையானக் குறியீடுகளாகும்.

உங்களுக்குத் தெரியுமா?






| G – 8 நாடுகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தலா வருமானம் (அமெரிக்க டாலரில் மதிப்பு) (2018) | தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (சார்க்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தலா வருமானம் (அமெரிக்க டாலரில் மதிப்பு) (2018) |
|---|---|---|---|
| இங்கிலாந்து | 40,03,000 | ஆப்கானிஸ்தான் | 610.24 |
| ரஷ்யா | 10,63,000 | பங்களாதேஷ் | 1,66,000 |
| கனடா | 47,66,000 | பூடான் | 3,22,000 |
| பிரெஞ்சு | 42,42,000 | இந்தியா | 1,99,000 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 61,69,000 | மாலத்தீவுகள் | 132,000 |
| இத்தாலி | 33,73,000 | நேபாளம் | 882.93 |
| ஜப்பான் | 40,06,000 | பாகிஸ்தான் | பொருந்தாது |
| ஜெர்மனி | 47,54,000 | இலங்கை | 4,05,000 |

ஆதாரம்: www.imf.org/external/datamapper

உங்களுக்குத் தெரியுமா?

ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் குறிப்பிட்டக் காலத்திற்குள் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே, மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.





பிரிக்ஸ் நாடுகள்

| பிரிக்ஸ் நாடுகள் | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) தலா வருமானம் (அமெரிக்க டாலரில் மதிப்பு) (2018) |
|---|---|
| பிரேசில் | 10,51,000 |
| ரஷ்யா | 10,63,000 |
| இந்தியா | 1,99,000 |
| சீனா | 9,38,000 |
| தென் ஆப்பிரிக்கா | 6,29,000 |

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு மனித வள மேம்பாட்டு அமைச்சகம் பொறுப்பாகும். அதன் தலைமையகம் புதுடெல்லியில் சாஸ்திரி பவனில் அமைந்துள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் உலகின் மனித வளர்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

**மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI)**

| வ. எண் | நாடுகள் | மனிதவள மேம்பாடு குறியீடு 2010 | மனிதவள மேம்பாடு குறியீடு 2015 |
|---|---|---|---|
| 1 | இந்தியா | 0.580 | 0.624 |
| 2 | ரஷ்யா | 0.785 | 0.804 |
| 3 | சீனா | 0.700 | 0.738 |
| 4 | பாகிஸ்தான் | 0.525 | 0.550 |
| 5 | நேபாளம் | 0.529 | 0.558 |
| 6 | பங்களாதேஷ் | 0.545 | 0.579 |
| 7 | தென்ஆப்பிரிக்கா | 0.638 | 0.666 |
| 8 | இலங்கை | 0.746 | 0.766 |

ஆதாரம்: hdr.undp.org/en/composite/trends

| வ. எண் | அளவுகள் | மாநிலங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆந்திரப் பிரதேசம் | கர்நாடகம் | கேரளா | குஜராத் | உத்திரப் பிரதேசம் | தமிழ்நாடு | இந்தியா |
| 1 | கல்வியறிவு விகிதம் % (2011) | 67.02 | 75.36 | 94 | 78.03 | 69.72 | **80.09** | **74.04** |
| 2 | பாலின விகிதம் (1000 ஆண்களுக்கு தலா பெண்களின் எண்ணிக்கை) (2011) | 993 | 973 | 1084 | 919 | 912 | **996** | **943** |
| 3 | உயர்கல்வியில் சேர்க்கை % (2015–16) | 30.8 | 26.1 | 30.8 | 20.7 | 24.5 | **44.3** | **24.5** |

ஆதாரம்: நிதி ஆயோக் (Niti Aayog)

Mob : 93634 59430, 75399 89555

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தென்மாநிலங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் கல்வியறிவு வீதம் தேசியச் சராசரியை விட அதிகமாக உள்ளது.

தமிழ்நாட்டில் உயர்கல்விக்கானச் சேர்க்கையானது இந்தியாவில் மிக உயர்ந்ததாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இடைக்கால வரலாற்றுக் காலத்தில் இந்தியாவின் டெல்லி சுல்தான் பெரோஸ் ஷா துக்ளக், வேலைவாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக "வேலைவாய்ப்பு அலுவலகத்தை" அமைத்தார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

*பொதுத் துறை நிறுவனங்கள்*

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்
இந்திய உருக்கு ஆணையம்
பாரத தொலைபேசி நிறுவனம்

*தனியார் துறை நிறுவனங்கள்*

டிவிஎஸ் மோட்டார் நிறுவனம்
அசோக் லேலண்ட்
டாடா இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை

**உங்களுக்குத் தெரியுமா?**

தனது அரசாட்சியில், ஷெர்ஷா சூரி (1540–1546) குடிமக்களுக்கும், இராணுவத்திற்குமான ஒரு புதிய நிர்வாக முறையை அமைத்தார். அவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 178கிராம் எடை கொண்ட வெள்ளி நாணயம் 'ருபியா' என்றழைக்கப்பட்டது. அந்நாணயம் முகலாயர், மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் காலம் வரை புழக்கத்தில் இருந்தது.

**உங்களுக்குத் தெரியுமா?**

பண விநியோகம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ப$_1$ = மக்களிடம் புழக்கத்தில் உள்ள பணம் மற்றும் நாணயங்கள் + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள வைப்புத்தொகை + ரிசர்வ் வங்கி வைப்புத்தொகை

ப$_2$ = ப$_1$ + அஞ்சலகசேமிப்பு வங்கிக் கணக்குகளில் சேமிக்கப்பட்டுள்ள தொகை

ப$_3$ = ப$_1$ + அனைத்து வணிக, கூட்டுறவு வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ள கால வைப்புத்தொகை

ப$_4$ = ப$_3$ + அஞ்சல் அலுவலகங்களின் மொத்த வைப்புத் தொகை




இருவேல்பட்டுவில் இருந்த குடும்பங்களின் வேலை விவரங்கள்(சதவீதத்தில்)

| தொழில் | குடும்பங்கள் % | |
|---|---|---|
| | 1981 | 2008 |
| பயிரிடுவோர் | 42 | 33 |
| விவசாயக் கூலிகள் | 34 | 26 |
| விவசாயமல்லாத தொழிலாளர்கள் | 24 | 41 |
| மொத்த குடும்பங்கள் | 100 | 100 |



**உங்களுக்குத் தெரியுமா?**



பணம் என்பது அதாவது காகிதப்பணம் என்பது ஒரு மதிப்பு ஆகும். எந்த ஒரு பொருள் அல்லது சேவைக்கான கட்டணமாகவும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும் ஒரு குறிப்பிட்ட நாடு முழுவதும் பொதுவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு சரிபார்க்கப்பட்ட ஆவணம் ஆகும். இந்தியப் பணத்தில் (இதனைக் கொண்டிருப்பவரிடம் ........ தொகை அளிப்பதற்கு உறுதி அளிக்கிறேன் I promise to pay the bearer the sum of ..... rupees) என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் உறுதி அளிப்பதாக ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு அதில் அவரது கையொப்பமும் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதேபோன்று அந்தந்த நாட்டுப் பணத்தில் உயர் அலுவலர் கையொப்பமும் உறுதிமொழியும் இடம் பெற்றிருக்கும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- உலகிலேயே மெக்ஸிகோ – அமெரிக்க ஐக்கிய நாடு இடையேயான இடப்பெயர்வு பாதையே 2010 ஆம் ஆண்டின் மிகப் பெரிய இடப்பெயர்வுப் பாதையாகும்.
- உலகிலேயே நீண்ட தூரம் இடம்பெயரும் பறவை 'ஆர்டிக் டெர்ன்' (Artic tern) பறவையாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 'பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்' (The Problem of the rupee and its Solution) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் அடிப்படையில் தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் 1934ல் உருவாக்கப்பட்டுள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

- தென் இந்தியாவின் மூன்றாவது பெரிய ஆறு காவிரி ஆகும் இது 765 கிலோ மீட்டர் நீளம் கொண்டது.
- காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் மேட்டூர் அணை மற்றும் கல்லணை கட்டப்பட்டுள்ளன.

**உங்களுக்குத் தெரியுமா?**



1867–68 ல் முதன் முதலாக தாதாபாய் நௌரோஜி தனது "இந்தியாவின் வறுமை மற்றும் ஒரு பிரிட்டிஷ்யில்லா ஆட்சி" என்ற புத்தகத்தில் தனி நபர் வருமானத்தைப் பற்றி முதன் முதலாக கூறியுள்ளார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1934 ஆம் ஆண்டின் காங்கிரஸ் அறிக்கையின் படி, சைமன் குஸ்நட் என்பவரால் GDPயின் நவீன கருத்து முதன் முதலில் உருவாக்கப்பட்டது.

**உங்களுக்குத் தெரியுமா?**

**GDPயின் மதிப்பீடு**

புள்ளியியல் துறை அமைச்சரவையின் கீழேயுள்ள மத்திய புள்ளியியல் அமைப்பு (CSO), GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கிறது. தொழிற்துறையின் உற்பத்தியை ஆண்டு கணக்கெடுப்பு நடத்தி தொழில்துறை உற்பத்தி குறியீடு (IIP), நுகர்வோர் விலை குறியீடு (CPI) போன்ற குறியீடுகளை வெளியிடுகிறது.

**உலக வர்த்தக அமைப்பு (World Trade Organisation)**

தலைமையகம் : ஜெனிவா, சுவிசர்லாந்து

நோக்கம் : வணிகத்தினை கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிபம்

WTO உறுப்பினர்கள்: தலைமை இயக்குநர், துணை தலைமை இயக்குநர்–4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

**2018 ல் இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள்**

1. சோனி கார்ப்பரேசன்
2. ஹவுலக் பேக்கார்டு (HP)
3. டாட்டா குழுமம்
4. மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன்
5. ஐ.பி.எம்
6. நெட்டில்
7. பிராக்டர் & கேம்பில்
8. சிட்டி குழுமம்
9. பெப்சி நிறுவனம்
10. கோகோ – கோலா நிறுவனம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**காட்டின் (GATT) சுற்றுகள்**

- I வது ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1947
- II வது அன்னிசி (பிரான்ஸ்) – 1949
- III வது டார்க்குவே (இங்கிலாந்து) – 1950–51
- IV, V மற்றும் VI ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1956, 1960–61, 1964–67
- VII வது டோக்கியோ (ஜப்பான்) – 1973–79
- 1986–1994 ல் VIII வது மற்றும் இறுதிச் சுற்று பன்டாடெல் எஸ் டீ (உருகுவே). இதை "உருகுவே சுற்று" என அழைத்தனர்.

இந்தியாவில் GDPயின் துறை வாரியான பங்களிப்பு அட்டவணை.

| ஆண்டு | விவசாயம் % | தொழில்கள் | பணிகள் % |
|---|---|---|---|
| 1950-51 | 51.81 | 14.16 | 33.25 |
| 1960-61 | 42.56 | 19.30 | 38.25 |
| 1970-71 | 41.95 | 20.48 | 37.22 |
| 1980-81 | 35.39 | 24.29 | 39.92 |
| 1990-91 | 29.02 | 26.49 | 44.18 |
| 2000-01 | 23.02 | 26.00 | 50.98 |
| 2010-11 | 18.21 | 27.16 | 54.64 |
| 2011-12 | 17.86 | 27.22 | 54.91 |
| 2012-13 | 17.52 | 26.21 | 56.27 |
| 2013-14 | 18.20 | 24.77 | 57.03 |
| 2015-16 | 17.07 | 29.08 | 52.05 |
| 2016-17 | 17.09 | 29.03 | 52.08 |
| 2017-18 | 17.01 | 29.01 | 53.09 |

**Source:** Central Statistics Office




rce: Statisticstimes.com

ப்பு: 2018–2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் GDPயில் துறை வாரியான பங்களிப்பை காட்டும் வரைபடம்.

உங்களுக்குத் தெரியுமா?

**WTO ஐந்து வகையான மானியங்களை குறிப்பிடுகிறது**

1 பண மானியங்கள் அளித்தல்,
2 விதிவிலக்குகள், கடன்கள் அல்லது இடைநிறுத்தல் போன்ற வரி சலுகைகள் அளித்தல்.
3 கடன் உத்தரவாதங்கள் போன்ற அபாயத்தை ஊகித்தல்.
4 அரசு கொள்முதல் கொள்கைகள் சுதந்திர சந்தை விலையை விட அதிகமாக செலுத்துதல்.
5 பங்கு கொள்முதல் சந்தை பங்குகளை விட ஒரு நிறுவனத்தின் பங்கு விலை அதிகமாக இருத்தல்.

இவை அனைத்தும் மானியங்கள் எனக் கருதப்படுகின்றன, ஏனென்றால் அவை வணிகம் செய்வதற்கான செலவினை குறைக்கின்றன.

### தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்

| வ. எண் | அதிக மாவட்டங்கள் | தரம் | குறைவான மாவட்டங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | தர்மபுரி | 32 |
| 2 | சென்னை | 2 | பெரம்பலூர் | 31 |
| 3 | கடலூர் | 3 | இராமநாதபுரம் | 30 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | விருதுநகர் | 29 |
| 5 | நாகப்பட்டினம் | 5 | அரியலூர் | 28 |

**அட்டவணை: 1** 1951–52 முதல் 2017–18 வரை இந்தியாவில் உணவு தானியங்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் மகசூல்

| மூன்று ஆண்டுகளுக்கான சராசரி மையச்சுற்று | பகுதி (மில்லியன் / ஹெ) | உற்பத்தி (மில்லியன் டன்) | மகசூல் (கிகி / ஹெ) |
|---|---|---|---|
| 1951-52 | 98.79 | 54.00 | 546.65 |
| 1971-72 | 122.07 | 103.54 | 848.18 |
| 1991-92 | 124.29 | 174.75 | 1406.02 |
| 2013-14 | 122.63 | 258.27 | 2106.00 |
| 2017-18 | 126.98 | 279.51 | 2201.00 |

ஆதாரம்: விவசாய புள்ளி விவரங்கள் ஒரு பார்வையில் 2018; பொருளாதார ஆய்வு 2017–18.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டைய கால வரி முறையை அடிப்படையாகக் கொண்டது.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

Mob : 93634 59430, 75399 89555

| வருமானம் | இந்திய நிறுவனங்கள் | அயல் நாட்டு நிறுவனங்கள் |
|---|---|---|
| ₹ 50 கோடிக்குள் | 25% | 40% |
| ₹ 50 கோடிக்கு மேல் | 30% | 40% |

உங்களுக்குத் தெரியுமா?

1954ஆம் ஆண்டு முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமுல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும். 1970–80 களில் பல ஐரோப்பிய நாடுகள் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அறிமுகப்படுத்தியது.

*1934–ல் R.G.D.ஆலன் (Allen) மற்றும் J.R.ஹிக்ஸ் (Hicks)* சமநோக்கு வளைகோடு கோட்பாட்டை "மதிப்புக் கோட்பாட்டின் மறுவடிவமைப்பு" என்னும் நூலில் விளக்கினர்.

**அட்டவணை 7.2– பிறப்பு மற்றும் இறப்பு வீதம்**

| ஆண்டு | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் |
|---|---|---|
| 1951 | 39.9 | 27.4 |
| 2001 | 25.4 | 8.4 |
| 2011 | 21.8 | 7.11 |

*(Source: Source: Registrar General of India)*

## நிதி ஆயோக்

திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் என்னும் அமைப்பு 2015–ம் ஆண்டு ஜனவரி 1–ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. இது நீடித்த நிலையான வளர்ச்சியை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் செயல்படுத்தவும் செயல்படும். நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமாகும். தேசிய மற்றும் சர்வதேச பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறைகளையும், புதிய கொள்கைகளையும் ஏற்படுத்தவும், தனிப்பட்ட பிரச்சினைகளுக்கான ஆதரவையும் தரும். இது சார்ந்த சாதனைகளை புரிந்து கொள்ள தனிப்பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும்.

## மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)

*HDI* – என்பதை பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த பொருளியல் அறிஞர் மஹபூப் உல் ஹக் (*Mahbul ul Haq*) – என்பவரும், இந்தியாவைச் சேர்ந்த அமர்த்தியா குமார் சென் அவர்களும் 1990– ல் மேம்படுத்தினர். இதனை ஐக்கிய நாடுகள் முன்னேற்ற திட்டம் (*UNDP*) வெளியிட்டது. இது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் குறியீடு, கல்விக் குறியீடு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் அமைக்கப்பட்டது.

அட்டவணை 7.1 மக்கள் தொகை அளவு

| கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள் தொகை (கோடிகளில்) | சராசரி ஆண்டு வளர்ச்சி |
|---|---|---|
| 1901 | 23.84 | - |
| 1911 | 25.21 | 0.56 |
| 1921 | 25.13 | -0.03 |
| 1931 | 27.90 | 1.04 |
| 1941 | 31.87 | 1.33 |
| 1951 | 36.11 | 1.25 |
| 1961 | 43.92 | 1.96 |
| 1971 | 54.81 | 2.20 |
| 1981 | 68.33 | 2.22 |
| 1991 | 84.33 | 2.16 |
| 2001 | 102.70 | 1.97 |
| 2011 | 121.02 | 1.66 |

*(Source: Registrar General of India)*

அட்டவணை 7.3 மக்கள் தொகை அடர்த்தி

| ஆண்டு | மக்கள் தொகை அடர்த்தி (ஒரு சதுர கிலோ மீட்டரில் உள்ள மக்கள்) |
|---|---|
| 1951 | 117 |
| 2001 | 325 |
| 2011 | 382 |

*(Source: Registrar General of India)*

அட்டவணை 7.4 பாலின விகிதம்

| கணக்கெடுப்பு ஆண்டு | பாலின விகிதம் (1000– ஆண்களுக்கு உள்ள பெண்கள் வீதம்) |
|---|---|
| 1951 | 946 |
| 2001 | 933 |
| 2011 | 940 |

*(Source: Source: Registrar General of India)*

## பொதுத்துறையில் எஃகு நிறுவனம்

| இடம் | உதவி |
|---|---|
| ரூர்கேலா (ஒரிசா) | ஜெர்மனி |
| பிலாய் (மத்தியபிரதேசம்) | ரஷ்யா அரசு |
| துர்காபூர் (மேற்குவங்காளம்) | இங்கிலாந்து அரசு |
| பொகாரோ (ஜார்கண்ட்) | ரஷ்ய அரசு |
| பர்னபூர் (மேற்கு வங்காளம்) | தனித்துறையிலிருந்து பெறப்பட்டது. |
| விசாகப்பட்டினம் (ஆந்திரா) | ரஷ்ய அரசு |
| பெர்ன்பூர் (மேற்கு வங்காளம்) | தனியார் துறையிடமிருந்து 1976-ல் பெறப்பட்டது |
| சேலம் (தமிழ்நாடு) | இந்திய அரசு (வெளிநாட்டு உதவி இல்லை) |
| விஜய் நகர் (கர்நாடகா) | இந்திய அரசு |
| பத்ராவதி (கர்நாடகா) | நாட்டுடைமையாக்கப்பட்ட விஸ்வேஸ்ரயா இரும்பு எஃகு நிறுவம் (மத்திய மாநில அரசுக்கு சொந்தம்) |

### அட்டவணை 7.5 வாழ்நாள் எதிர்பார்ப்பு

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1951 | 32.5 | 31.7 | 32.1 |
| 1991 | 58.6 | 59.0 | 58.7 |
| 2001 | 61.6 | 63.3 | 62.5 |
| *2011* | *62.6* | *64.2* | *63.5* |

*(Source: Registrar General of India)*

### அட்டவணை 7.6 – எழுத்தறிவு விகிதம்

| கணக்கெடுப்பு ஆண்டு | கல்வியறிவு பெற்றவர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.3 | 27.2 | 8.9 |
| 2001 | 64.8 | 75.3 | 53.7 |
| 2011 | 74.04 | 82.1 | 65.5 |

*(Source: Registrar General of India)*

## முதல் மூன்று நாடுகள் (HDI)

நார்வே (0.949)

ஆஸ்திரேலியா (0.939)

சுவிட்சர்லாந்து (0.939)

முதலீட்டு விலக்கல் (DISINVESTMENT)

முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது. முதலீட்டு விலக்கம் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அட்டவணை 9.1 உணவுப்பொருள் கழிவுகள் (%)

| பயிர்கள் | கூட்டு விரயங்கள் (சதவீதங்களில்) |
|---|---|
| தானியங்கள் | 5-6 |
| பருப்பு வகைகள் | 6 – 8 |
| எண்ணெய் வித்துக்கள் | 3-10 |
| பழங்கள் மற்றும் காய்கறிகள் | 5-16 |
| பால் | 1 |
| மீன் வளம் (நிலத்தில்) | 5 |
| மீன் வளம் (கடலில்) | 10 |
| இறைச்சி | 3 |
| கோழி | 7 |

(ஆதாரம்: மூல உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் – இந்திய அரசு 2016)

| திட்டங்கள் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) | 2010 |
| பாரத் நிர்மான் யோஜனா | 2005 |
| இந்திரா ஆவாஸ் யோஜனா | 1985 1986 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) | 2005 |
| ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) | 2009 |
| தேதிய ஊரக நலத்திட்டம் | 2005 |
| தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 2011 |
| தேசிய உணவுப் பாதுகாப்புத்திட்டம் | 2013 |

| திட்டங்கள் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) | 2010 |
| பாரத் நிர்மான் யோஜனா | 2005 |
| இந்திரா ஆவாஸ் யோஜனா | 1985 1986 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) | 2005 |
| ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) | 2009 |
| தேதிய ஊரக நலத்திட்டம் | 2005 |
| தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 2011 |
| தேசிய உணவுப் பாதுகாப்புத்திட்டம் | 2013 |



பணிக்கான படிப்பு (Jobs Study) என்ற ஆய்விற்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்கன் மற்றும் கிறிஸ்டோர் பிசாரிட்ஸ் ஆகிய பொருளாதார அறிஞர்கள் 2010-ம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினை பகிர்ந்து கொண்டனர் இவர்கள் உருவாக்கிய முறைக்கு அல்லது கோட்பாட்டிற்கு DMP முறை எனப்படும். பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் எப்படி வேலையின்மை, வேலைக்கான காலியிடங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை பாதிக்கிறது என அறிந்துகொள்ள DMP முறை உதவுகிறது.

NABARDன் SHG வங்கி இணைப்பு திட்டத்தின்படி உறுப்பினர்கள் கடனை சரியாக திருப்பி செலுத்திய பதிவை வைத்திருக்கும் சுய உதவிக் குழுக்கள் வங்கியில் கடன் பெற இயலும். 2005-2006 ஆண்டில் தென் மாநிலங்களான ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 60% சுய உதவிக் குழுக்கள் வங்கி இணைப்பு கடன் வசதியை பெற்றுள்ளன. (தருணா மற்றும் யாதவ், 2016)

"இந்தியாவில் 2015 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மற்றும் சாதி ரீதியான கணக்கீட்டின்படி, 73% மக்கள் ஊரக பகுதிகளில் வசிக்கின்றனர். இதில் 18.5% மக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள, 11% மக்கள் பழங்குடியினர்!

இந்தியாவின் ஊரக சாலை பகுதி 26.50 இலட்சம் கி.மீ ஆகும். இதில் 13.5 சதவீதம் பகுதிகளில் மட்டுமே சாலைகள் போடப்பட்டுள்ளன

இந்தியாவின் சாலை தொடர்பு வசதி அமைப்புகள் உலகிலேயே பெரிய அமைப்புகளுள் ஒன்றாகும். 1950 – 51ல் 4 இலட்சம் கி.மீட்டர் நீளமாக இருந்த இந்தியச் சாலைகளின் நீளம் தற்போது 2018-ல் 34 இலட்சம் கி.மீட்டர் ஆகும்.

2009-10 ஆம்ஆண்டின்படி 1.59 மில்லியன் புதிய சுய உதவிக் குழுக்கள் இக்கடன் பெறும் வசதியோடு இணைக்கப்பட்டன. மற்றும் வங்கிகள் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.14,453 கோடி கடனாக வழங்கப்பட்டது. 2010 மார்ச் முடிவில் 6.95 மில்லியன் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் சேமிப்பு கணக்கை வைத்திருந்தனர்.

### அட்டவணை 11.1 பாசனத்திற்கான ஆதாரங்கள்

| பாசன விவரங்கள் | எண்ணிக்கை |
|---|---|
| அணைக்கட்டுகள் | 81 |
| கால்வாய்கள் | 2239 |
| குளங்கள் | 41262 |
| குழாய் கிணறுகள் | 3,20,707 |
| திறந்தவெளி கிணறுகள் | 14,92,359 |

Source: Tamil Nadu Government Season & Crop Report 2012-13

### அட்டவணை 11.2 கனிம வளங்கள்

| கனிமம் | இருப்பு (டன்களில் | நாட்டின் இருப்பில் தமிழகத்தின் பங்கு |
|---|---|---|
| லிக்னைட் | 30,275,000 | 87% |
| வேர்மிகுலைட் | 2,000,000 | 66% |
| கார்னெட் | 23,000,000 | 42% |
| ஜேர்கான் | 8,000,000 | 38% |
| கிராபைட் | 2,000,000 | 33% |
| லெமனைட் | 98,000,000 | 28% |
| ரூட்டைல் | 5,000,000 | 27% |
| மோனசைட் | 2,000,000 | 25% |
| மேக்னசைட் | 73,000,000 | 17% |

(ஆதாரம்: புவியியல் மற்றும்

### அட்டவணை 11.3 மக்கள் தொகை

| மாநிலம் / நாடு | மக்கள் தொகை (கோடியில்) |
|---|---|
| தமிழ்நாடு | 7.2 |
| இங்கிலாந்து | 6.5 |
| பிரான்ஸ் | 6.5 |
| இத்தாலி | 5.9 |
| தென் ஆப்பிரிக்கா | 5.6 |
| ஸ்பெயின் | 4.7 |
| இலங்கை | 2.1 |

(ஆதாரம்: 2017-ல் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு வெளியிட்ட உலக மக்கள் தொகை பட்டியல்)

### அட்டவணை 11.4 சுகாதாரம் மற்றும் சமூகக் குறியீடுகள்

| வ. எண் | குறியீடு | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|---|
| 1 | IMR | 17 | 34 |
| 2 | MMR | 79 | 159 |
| 3 | வாழ்நாள் எதிர்பார்ப்பு (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 70.6<br>68.6<br>72.7 | 67.9<br>66.4<br>69.6 |
| 4 | கல்வியறிவு வீதம் (மொத்தம்)<br>ஆண்கள்<br>பெண்கள் | 80.33 %<br>86.81 %<br>73.86 % | 74.04%<br>82.14%<br>65.46% |
| 5 | பாலின விகிதம் | 995 | 940 |

### அட்டவணை 11.6 – தமிழக தலாவருமானம் பிற நாடுகளுடன் ஒப்பீடு

| மாநிலம் / தேசம் | தனிநபர் வருமானம் (டாலர்களில்) |
|---|---|
| தமிழ்நாடு | 2200 |
| இந்தியா | 1670 |
| நைஜீரியா | 2175 |
| நிகரகுவா | 2151 |
| பாகிஸ்தான் | 1443 |
| வங்காளதேசம் | 1358 |
| ஜிம்பாப்வே | 1029 |
| நேபாளம் | 729 |

(ஆதாரம்: உலக வங்கியின் தேசிய கணக்குகள் OECD தேசிய கணக்குகள்)

### அட்டவணை 11.5 உலக நாடுகளுடன் தமிழ்நாட்டு GSDP – ஓர் ஒப்பீடு

| மாநிலம் / தேசம் | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|
| தமிழ்நாடு (GSDP) | $ 207.8 |
| ஈராக் (GDP) | $ 171 |
| நியுசிலாந்து (GDP) | $ 184 |
| இலங்கை (GDP) | $ 81 |

(ஆதாரம்: IMF அவுட்லுக் ஏப்ரல் 2017)

### அட்டவணை 11.6 – தமிழக தலாவருமானம் பிற நாடுகளுடன் ஒப்பீடு

| மாநிலம் / தேசம் | தனிநபர் வருமானம் (டாலர்களில்) |
|---|---|
| தமிழ்நாடு | 2200 |
| இந்தியா | 1670 |
| நைஜீரியா | 2175 |
| நிகரகுவா | 2151 |
| பாகிஸ்தான் | 1443 |
| வங்காளதேசம் | 1358 |
| ஜிம்பாப்வே | 1029 |
| நேபாளம் | 729 |

(ஆதாரம்: உலக வங்கியின் தேசிய கணக்குகள் OECD தேசிய கணக்குகள்)

### அட்டவணை 11.7 தலா வருமானம் (ரூபாயில்) (2015–16) பிற மாநிலங்களுடன் ஒப்பீடு

| மாநிலம் | தனிநபர் வருமானம் (ரூபாயில்) |
|---|---|
| தமிழ்நாடு | 1,57,116 |
| கேரளா | 1,55,516 |
| கர்நாடகா | 1,46,416 |
| தெலுங்கானா | 1,58,360 |
| ஆந்திரபிரதேசம் | 1,37,000 |

(ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி நியூடெல்லி 17 பிப்ரவரி 2017)

### அட்டவணை 11.9 தென் மாநிலங்களில் நிறுவப்பட்ட மின் பயன்பாட்டுத் திறன்

| மாநிலம் | அலகுகள் | தரம் |
|---|---|---|
| தமிழ்நாடு | 26,865 MW | I |
| கர்நாடகா | 18,641 MW | II |
| ஆந்திரா | 17,289 MW | III |
| தெலுங்கானா | 12,691 MW | IV |
| கேரளா | 4,141 MW | V |
| மொத்தம் | 79,627 MW | |

(Source: Central Electricity Authority, Ministry of Power, Government of India. Retrieved Jan.2017.)

### அட்டவணை 11.8 – தேசிய அளவில் தமிழ்நாட்டின் உற்பத்தித்திறன் நிலை

| தானிய வகை | தேசிய அளவில் தமிழக நிலை |
|---|---|
| மக்காச் சோளம் | 1 |
| கம்பு | 1 |
| கடலை | 1 |
| எண்ணெய் வித்துக்கள் | 1 |
| பருத்தி | 1 |
| தேங்காய் | 2 |
| நெல் | 2 |
| கரும்பு (மெட்ரிக் டன்) | 3 |
| சூரியகாந்தி | 3 |
| சோளம் | 3 |
| திடமான தானியங்கள் | 4 |
| மொத்த தானியங்கள் | 8 |

### அட்டவணை 11.10 அணுமின் ஆற்றல்

| அலகு | ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள திறன் அளவு |
|---|---|
| கூடங்குளம் | 1834 MW (2 x 917) |
| கல்பாக்கம் | 470 MW (2 x 235) |

(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் -ஜனவரி-2017 அறிக்கை)

### அட்டவணை 11.11 வெப்ப ஆற்றல்

| ஆதாரம் | மில்லியன் அலகுகள் | சதவீதம் |
|---|---|---|
| அனல் | 13304 | 49.52 |
| புனல் | 2203 | 8.20 |
| அணு | 986 | 3.67 |
| பிற (காற்று சூரிய ஒளி) | 10372 | 38.61 |
| மொத்தம் | 26865 | 100.00 |

(ஆதாரம்: மத்திய மின் துறை அமைச்சகம் -ஜனவரி-2017 அறிக்கை)

### அட்டவணை 11.12 சூரிய சக்தி மின்சாரம்

| தர வரிசை | மாநிலம் | மொத்த திறன் 31 ஜனவரி 2017 (மெகாவாட்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 1590.97 |
| 2 | ராஜஸ்தான் | 1317.64 |
| 3 | குஜராத் | 1159.76 |
| 4 | தெலுங்கானா | 1073.41 |
| 5 | ஆந்திரா | 979.65 |

(ஆதாரம்: MNRE லிருந்து பெறப்பட்ட விபரம்)

### அட்டவணை 11.13 தமிழ்நாடு தொடக்கக் கல்வி புள்ளிவிபரம்

**தமிழ்நாடு தொடக்கக் கல்வி புள்ளிவிபரம் 2014–15**

| | | |
|---|---|---|
| பள்ளிகளின் எண்ணிக்கை | துவக்கப் பள்ளிகள் | 35,414 |
| | நடுநிலைப் பள்ளிகள் | 9,708 |
| | உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் | 12,911 |

(ஆதாரம்: தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் 2016–17)

### அட்டவணை 11.14 உயர்கல்வியில் மொத்த சேர்க்கை வீதம்

| மாநிலம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| தமிழ்நாடு | 44.3 | 46.9 |
| மகாராஷ்டிரா | 29.9 | 30.2 |
| உத்திரப்பிரதேசம் | 24.5 | 24.9 |
| ஓடிசா | 19.6 | 21.0 |
| பீகார் | 14.3 | 14.4 |
| மொத்த இந்தியா | 24.5 | 25.2 |

(ஆதாரம்: அனைத்து இந்திய உயர் கல்விக்கான விபரம் - மனித வள மேம்பாட்டு மந்திரிசபையின் ஜனவரி -2018 அறிக்கை)

### பொதுத்துறையில் எஃகு நிறுவனம்

| இடம் | உதவி |
|---|---|
| ரூர்கேலா (ஒரிசா) | ஜெர்மனி |
| பிலாய் (மத்தியபிரதேசம்) | ரஷ்யா அரசு |
| துர்காபூர் (மேற்குவங்காளம்) | இங்கிலாந்து அரசு |
| பொகாரோ (ஜார்கண்ட்) | ரஷ்ய அரசு |
| பர்னபூர் (மேற்கு வங்காளம்) | தனித்துறையிலிருந்து பெறப்பட்டது. |
| விசாகப்பட்டினம் (ஆந்திரா) | ரஷ்ய அரசு |
| பெர்ன்பூர் (மேற்கு வங்காளம்) | தனியார் துறையிடமிருந்து 1976-ல் பெறப்பட்டது |

### உலகத்துவம்

பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன்மூலம் உலகமுன்னேற்றத்தை எதிர்நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதியஅங்காடி தத்துவத்தை குறிப்பிட்ட, உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை, மேன்பிரட்டிஸ்டீகர் (Manfred D Steger) 2002ம் ஆண்டு உருவாக்கினார். இந்த தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் (Extended Capitalism) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

## 2.3 இலக்கணம்

"ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துகின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத்தொகை ஆகும்".

–ஆல்ஃபிரட் மார்ஷல் (Alfred Marshall)

### பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்

| வ. எண். | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின் தீர்வு | தடையில்லா சந்தை முறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலைபற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுபாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

"ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர வெளியீடாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்கு செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது"

– சைமன் குஸ்நட்ஸ்

**பண்டமாற்று முறையின் வரலாறு 6000 BCயில் துவங்கியது.**

- மெசபடேமியா பழங்குடியினரால் பண்டமாற்று முறை பயன்படுத்தப்பட்டது.
- போயனீசியர்களால் கடல் கடந்து பல்வேறு நகரங்களில் இம்முறை பயன்படுத்தப்பட்டது.
- பாபிலோனியர்கள் பொருட்களுக்குப் பொருட்களை மாற்றும் பண்டமாற்று முறையை பயன்படுத்தினர்.

## மொத்த உள்நாட்டு உற்பத்தி – செலவுகள், காரணி வருவாய், உற்பத்தி கூட்டு முறை

| GDP (செலவு கூட்டுமுறை) | GDP (காரணி வருவாய் முறை) | GDP (உற்பத்தி முறை) |
|---|---|---|
| • நுகர்ச்சி<br>• அரசு செலவினங்கள்<br>• முதலீட்டுச் செலவினங்கள்<br>• இருப்புகளின் மதிப்பு மாறல்<br>• ஏற்றுமதி<br>• – இறக்குமதி<br>• = மொத்த உள்நாட்டு உற்பத்தி | • மக்களின் சம்பளம், கூலி, சுய வேலை செய்வோருக்கான சம்பளம்<br>• தனியார் துறை வியாபாரம் மூலம் கிடைக்கும் இலாபம்<br>• நில உரிமையாளர்கள் பெறும் வாடகை | • பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் கூட்டப்பட்ட மதிப்பு<br>• இத்துறைகள்<br>◦ முதன்மை<br>◦ இரண்டாம் நிலை<br>◦ தயாரிப்பு<br>◦ துணை நிறுவனங்கள் |

### பணக் குறியீடு ₹

இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மும்பையில் முதுகலைப் பட்டம் பெற்ற திரு. D. உதயகுமாரால் வடிவமைக்கப்பட்ட புதிய பணக் குறியீடு ஜுலை 15, 2010ம் ஆண்டில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவநாகரி எழுத்து 'ரா' வும் ரோமன் எழுத்து 'R' இல் செங்குத்துக்கோடு இல்லாமலும் உள்ள வடிவமைப்பாகும். அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குப்பின் இந்தியா தனிப் பணக் குறியீடு கொண்ட நாடாக விளங்குகின்றது.

21ஆம் நூற்றாண்டின் முதல் உயர் பணவீக்கம் முன்னெப்பொழுதும் இல்லாத அளவாக ஜிம்பாப்வே நாட்டில் ஆண்டிற்கு 3714 சதவிகிதமாக ஏப்ரல் 2007 இறுதியில் உயர்ந்தது.

### முதன்மை வைப்புக்கள்

- முதன்மை வைப்புக்களைக் கொண்டே வங்கிகள் கடன்களும் முன்பணங்களும் வாடிக்கையாளர்களும் வழங்குகின்றது.
- இதற்கான முயற்சிகளை வாடிக்கையாளர்களே செய்கின்றனர். இதில் வங்கிகளின் பங்கு செயலற்றது.
- எனவே இந்த வைப்புக்கள் செயலற்ற வைப்புக்கள் எனப்படுகின்றது.

18ம் நூற்றாண்டில் காகிதப் பணம் வெளியிடும் முறை துவங்கியது. தனியார் வங்கிகளான வங்காள வங்கி, மும்பை வங்கி மற்றும் சென்னை வங்கிகள் முதலில் காகிதப் பணத்தை அச்சடித்தது.

ஷெர் ஷா சூரி (Sher shah suri) என்பவரால் ₹1 க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது. சமஸ்கிருதச் சொல்லான ரௌப்பியா (Raupya) விலிருந்து ரூபாய் என்ற வார்த்தை தோன்றியது. இந்தியாவின் பன்முகத் தன்மையை விளக்கும் விதமாக ஒவ்வொரு ரூபாய் நோட்டிலும் அதன் மதிப்பு 17 மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் (முன்பக்கத்தில் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பின்பக்கத்தில் மற்ற 15 மொழிகளிலும்)

## இந்திய ரிசர்வ் வங்கி

### வரலாறு

- 1934ம் ஆண்டு சட்ட விதிப்படி 1935ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி அமைக்கப்பட்டது.
- ஜனவரி 1ம் தேதி 1949ம் ஆண்டு தேசியமயமாக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சொந்தமானது.
- 1937 ல் தலைமை அலுவலகம் கல்கத்தாவிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.
- ஓஸ்போர்ன் ஸ்மித் (Osborne smith) RBI இன் முதல் ஆளுநர் ஆவார்

### நிர்வாகம்

- மைய வங்கி/மற்ற இந்திய வங்கிகளின் நெறியாளர்
- கடைசி நிலைக் கடன் ஈவோன்
- ஆளுநர், நான்கு துணை ஆளுநர்கள் மற்றும் மைய அரசால் நியமிக்கப்படும் மைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

### பணிகள்

- காகிதப்பணம் வெளியிடுதல்
- அரசின் வங்கியாகச் செயல்படுதல் (அரசிற்கான நிதி வருவாயைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அரசின் செலவினங்களுக்குப் பணம் வழங்குதல்)
- இந்திய வங்கி அமைப்புக்களை நெறிப்படுத்துதல்
- அந்நியச் செலாவணியின் பாதுகாவலன்
- கடன் அளிப்பை நெறிப்படுத்துதல்.

## கடன் கட்டுபாட்டு முறைகள்

### கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள்

1. வங்கி விகிதக் கொள்கை
2. வெளிச்சந்தை நடவடிக்கைகள்
3. மாறும் குறைந்தபட்ச வங்கி ரொக்க இருப்பு விகிதம்

### கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்

1. கடன் பங்கீடு
2. நேரடி நடவடிக்கைகள்
3. நெறிமுறை தூண்டல்
4. விளம்பரப்படுத்துதல்
5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல்
6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல்

| NEFT | RTGS |
|---|---|
| தேசிய மின்னனு வழி பணப்பரிவர்த்தனை | நிகழ்நேர பெருந்திரள் தீர்வுகள் |
| தொகுப்பாக பரிமாற்றம் செய்யப்படுகின்றது. எனவே தாமதமாகும் | நிகழ்நேரத்தில் பரிமாற்றம். எனவே விரைவாகச் செயல்படும். |
| நேரம்: காலை 8 மணிமுதல் மாலை 6.30 மணிவரை (மாலை 12.30 வரை மட்டும் சனிக்கிழமைகளில்) | நேரம் காலை 9 மணிமுதல் மாலை 4.30 வரை (மாலை 1.30 வரை சனிக்கிழமைகளில்) |
| குறைந்தபட்ச அளவு கிடையாது | குறைந்தபட்ச அனுப்பும் தொகை ₹2 இலட்சம் |

உழைப்பின் அளவு)

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டைகோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டைகோதுமை = 0.88 மீட்டர் துணி |




வரைபடம் 7.2

குறிப்பு: வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடனவை

### பணக்கொள்கையின் இரண்டு நிலைகள்

**பணவீக்கம்** (மலிவுப்பணக்கொள்கை)

1. கடன் பெறுதல் எளிது
2. நுகர்வோர் அதிகம் நுகர்வர்
3. வியாபாரம் விசாலமாகும்
4. அதிக மக்கள் வேலை பெறுவார்கள்
5. மக்கள் அதிகம் செலவு செய்வார்கள்

**மந்தநிலை** (அருமைப்பணக்கொள்கை)

1. கடன் பெறுதல் கடினம்
2. நுகர்வோர் குறைவாக நுகர்வர்
3. வியாபார விரிவாக்கம் தள்ளிப்போகும்
4. வேலையின்மை அதிகரிக்கும்
5. உற்பத்தி குறையும்.

| நாடு | இந்தியா | சீனா |
|---|---|---|
| | (தொழிலாளரின் தலா உற்பத்தி) | |
| கோதுமை | 20 | 8 |
| துணி | 6 | 14 |

உழைப்பின் அளவு)

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டு பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டைகோதுமை = 1.2 மீட்டர் துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டைகோதுமை = 0.88 மீட்டர் துணி |



வரைபடம் 7.2

குறிப்பு: வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடனவை

**ஒரு முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறும் நிலை**




ஒரு நாட்டின் (வழங்கும் நாடு) மக்களும் அரசாங்கமும் மற்றொரு நாட்டின் ( பெறும் நாடு) தொழிற்சாலைகளில் செய்யும் முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறுகிறது

உதாரண விளக்கம்

| விபரங்கள் | இந்தியா | அமெரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன உழைப்பு விகிதம் | 40/50 = 0.8 | 30/24 = 1.25 |

**வெளிநாட்டு நிதி மூலதனம் (FPI)**

ஒரு நாட்டில் வெளிநாட்டினர் வங்கிகளில் நிறுவன பங்கு வாங்குவதில், கடன் பத்திரம் வாங்குவதில் மற்றும் முன் பேர. வர்த்தகத்தில் முதலீடு செய்வதை வெளிநாட்டு நிதி மூலதனம் (Foreign Protfolio Investment) எனலாம். இது வாணிபச் செலுத்துச் சமநிலை மூலதனக் கணக்கின் ஒரு பகுதியாகும்.

### வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு (FII)

வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு என்பது பணசந்தை மற்றும் முன்பேர நிதி சந்தைகளில் நிதி நிறுவனங்கள் வழியாக செய்யப்படும் நிதி மூலதனமாகும். குறுகிய கால லாபத்திற்காக செய்யப்படும் முதலீடாகும். எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகளிலுள்ள ஒரு பரஸ்பர நிதி நிறுவனம் இந்தியாவை சார்ந்த ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யலாம்.

### சிந்தித்து செயலாற்றுதல்

1. இந்தியப் பணம், அமெரிக்க டாலரிடையேயான செலாவணி விகிதம் இது $1 = ₹65 என வைத்துக்கொள்வோம். இது $1 = ₹55 என மாறினால், எப்பணத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. எப்பணத்தின் மதிப்பு குறைந்துள்ளது?
2. நம்மாநிலத்தின் முக்கிய நபரின் ஆரோக்கியத்தைச் சோதித்தறிய இங்கிலாந்திலிருந்து ஒரு மருத்துவர் அழைக்கப்படுகிறார் எனக் கொள்வோம். இம்மருத்துவருக்கு வழங்கப்படும் கட்டணங்கள் வாணிபச் செலுத்துச் சமநிலைக் கணக்குகளில் எக்கணக்கில் பதிவுசெய்யப்படும்?




| நிறுவனம் | தலைமையிடம் | துவங்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| பன்னாட்டு பண நிதியம் | வாஷிங்டன் டி.சி | 1945 |
| உலக வங்கி | வாஷிங்டன் டி.சி | 1945 |
| உலக வர்த்தக அமைப்பு | ஜெனிவா | 1995 |

## உலக வங்கியின் நோக்கங்கள்

1. மறுசீரமைப்பு மற்றும் மேம்பாடு
2. மூலதன முதலீட்டிற்கு ஊக்குவிப்பு
3. பன்னாட்டு வாணிபத்திற்கு ஊக்குவிப்பு
4. அமைதிகால பொருளாதாரத்தை உருவாக்கல்
5. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**உங்களுக்குத் தெரியுமா?**

1995ம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பு ஏற்படுத்திய வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை (TRIPS) ஒப்பந்தம் பன்னாட்டு அறிவுசார் சொத்துரிமை சட்டத்திலும் கொள்கை முடிவெடுப்பதிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளும் முரண்பாடுகளும் வர்த்தகத்தை பாதிப்பதோடு அதன் பயனைத் தடுப்பதாக உள்ளது என்பதை TRIPS செயல்பாட்டாளர்கள் தொடர்பான வர்த்தகத்துக்கு துணை புரிவதாக இருந்தாலும் அமைப்பு நாடுகள் வேறுபட்ட உள்நாட்டுக் கொள்கைகளை கடைப்பிடிக்க வழிவகைகள் உள்ளன.

## உலக வர்த்தக மையம்




WTC என்பது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கை தலைமையகமாகக் கொண்டு அமைந்துள்ளது. இரட்டைக் கோபுரங்கள் என்று அழைக்கப்பட்ட அது ஏப்ரல் 4, 1973ல் துவங்கப்பட்டது. பின்னர் செப்டம்பர், 11, 2001 அன்று விமானத் தாக்குதலால் அழிக்கப்பட்டது. உலகம் முழுவதும் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடும் வணிகங்களை அது ஒன்று சேர்க்கிறது.

## WTO – ன் முக்கிய பணிகள்

❖ WTO உடன்படிக்கைகளை நிர்வகித்தல்
❖ வாணிப பேச்சுவார்த்தைகளுக்கான மன்றம்
❖ வாணிப தகராறுகளை கையாளுதல்
❖ தேசிய வாணிக கொள்கைகளை கண்காணித்தல்
❖ வளர்ந்து வரும் நாடுகளுக்கான தொழில் நுட்ப உதவி மற்றும் பயிற்சி

WTO – ன் பணிகள் பின்வருவனவாகும்.

## உலக வர்த்தக அமைப்பின் வணிக அமைச்சர்களின் மாநாடு

WORLD TRADE ORGANIZATION

1. கசகிஸ்தான் – 2020
2. பியூனோஸ் ஏரிஸ் – 10 – 13 டிசம்பர் 2017
3. நைரோபி – 15 – 18 டிசம்பர் 2015
4. பாலி – 3 – 6 டிசம்பர் 2013
5. ஜெனிவா – 15 – 17 டிசம்பர் 2011
6. ஜெனிவா – 30 நவம்பர் – 2 டிசம்பர் 2009
7. ஹாங்காங் – 13 – 18 டிசம்பர் 2005
8. கான்கன் – 10 – 14 செப்டம்பர் 2003
9. டோகா – 9–13 நவம்பர் 2001
10. சீட்டில் – 30 நவம்பர் – 3 டிசம்பர் 1999
11. ஜெனிவா – 18 – 20 மே 1998
12. சிங்கப்பூர் – 9 – 13 டிசம்பர் 1996

## வரி விதிப்பு விதிகள்

1. சிக்கன விதி
2. சமத்துவ விதி
3. வசதி விதி
4. உறுதி விதி
5. திறன் மற்றும் நெகிழ்வு விதி



## பிரிக்ஸ் பற்றிய சில தகவல்கள்

- BRICS நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 சதவீதம் பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் உலக GDPல் தனது பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.
- உலக மக்கள் தொகையில் BRICS 43 சதவீதத்தை இருப்பிடமாக கொண்டுள்ளது.
- BRICS நாடுகள் இணைந்து சுமார் $ 4.4. டிரில்லியன் அன்னிய இருப்பை பெற்றுள்ளது

| நிறுவனம் | தலைமையகம் | தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| SAARC | காத் மண்டு | 1985 |
| ASEAN | ஜஹார்த்தா | 1967 |
| BRICS | ஷாங்காய் | 2001 |

Mob : 93634 59430, 75399 89555

| நிதிக்குழு | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு | தலைவர் | செயல்படும் காலம் |
|---|---|---|---|
| முதலாவது | 1951 | K. C. நியோகி | 1952–57 |
| இரண்டாவது | 1956 | K. சந்தானம் | 1957–62 |
| மூன்றாவது | 1960 | A. K. சந்தா | 1962–66 |
| நான்காவது | 1964 | P. V. ராஜ்மன்னார் | 1966–69 |
| ஐந்தாவது | 1968 | மகாவீர் தியாகி | 1969–74 |
| ஆறாவது | 1972 | K. பிரமானந்த ரெட்டி | 1974–79 |
| ஏழாவது | 1977 | J. M. சாலட் | 1979–84 |
| எட்டாவது | 1983 | Y. B. சவான் | 1984–89 |
| ஒன்பதாவது | 1987 | N. K. P. சால்வே | 1989–95 |
| பத்தாவது | 1992 | K. C. பந்த் | 1995–2000 |
| பதினொன்று | 1998 | A. M. குஸ்ரோ | 2000–05 |
| பன்னிரெண்டு | 2002 | C. ரங்கராஜன் | 2005–10 |
| பதிமூன்று | 2007 | Dr.வஜய் L. கேல்கார் | 2010–15 |
| பதிநான்கு | 2013 | Dr. Y. V ரெட்டி | 2015–20 |
| பதினைந்து | 2017 | N. K. சிங் | 2020–25 |

| வெளிநாட்டுக் கடன் – ஜுன் 2018 – நிலவரப்படி | | | | | |
|---|---|---|---|---|---|
| தரவரிசை | நாடுகள் | | வெளிநாட்டுக் கடன் (மில்லியன் டாலரில்) | தலா வீத கடன் அளவு (US டாலரில்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கடன் சதவீதம் (GDP) |
| 1 | | அமெரிக்கா | 21,171,000 | 58,200 | 98 |
| 2 | | இங்கிலாந்து | 8,475,956 | 127,000 | 313 |
| 3 | | பிரான்சு | 5,689,745 | 87,200 | 213 |
| 4 | | ஜெர்மனி | 5,398,267 | 65,600 | 141 |
| 7 | | ஜப்பான் | 3,586,817 | 28,200 | 74 |
| 13 | | சீனா | 1,710,625, | 1,200 | 14 |
| 21 | | ரஷ்யா | 537,458 | 3,700 | 40 |
| 22 | | இந்தியா | 529,000 | 380 | 20 |

ஆதாரம்: உலக வங்கி அறிக்கை மற்றும் இந்தியாவின் கடன் சார்ந்த அறிக்கை – மார்ச் 2018 (RBI – அறிக்கை – நாள் – 29.06.2018)

வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் வழிமுறைகள்

நிதி அமைச்சகம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை தயார் செய்யும்

↓

பல்வேறு துறைகள் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளை நிதி அமைச்சகத்திற்கு அனுப்பும்

↓

வரவு செலவுத் திட்டம் தயாராகும்

↓

மந்திரி சபை ஒப்புதலுக்கு, நிதி அமைச்சர் தாக்கல் செய்வார்.

↓

பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு தயார் நிலையில் இருக்கும்

0

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை = மொத்தச் செலவு – மொத்த வரவு

இ. நிதிப் பற்றாக்குறை

நிதிப்பற்றாக்குறை = வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்

உலக அளவில் ஒவ்வொரு நாளும் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் 93 சதவீதம் பேர் (1.8 பில்லியன்) மாசுபட்ட காற்றை சுவாசிப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மோசமான இடர்ப்பாடுக்கு உள்ளாகின்றனர்.

– உலக சுகாதார நிறுவனம் WHO

## சர்வாதிகார திட்டமிடல்



மையத் திட்டக் குழு ஒரு திட்டத்தை கையில் வைத்துக் கொண்டு நாட்டின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி, விரும்பிய திசையில் நடைபெற வைப்பதே சர்வாதிகாரத் திட்டமிடல்.

## திட்டமிடல்



**நீண்டகாலம் 10 ஆண்டுகளுக்கு மேல்**

நீண்ட கால திட்டமிடல் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – வியூகத்திட்டமிடல்

**நடுத்தர காலம் 3 – 7 ஆண்டுகள்**

நடுத்தர கால திட்டமிடல் 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது – தந்திரமான திட்டமிடல்

**குறுகிய காலம் 1 – ஆண்டு வரை**

குறுகிய கால திட்டமிடல் ஆண்டு வரை ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது – செயல்பாட்டு திட்டமிடல்

### பொருளாதார வளர்ச்சிகுன்றிய நாடுகளின் சிறப்பியல்புகள்

**அறிமுகம்**

- வளர்ச்சி குன்றிய நாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி அறியலாம்.
- உலகவங்கியின் வளர்ச்சிஅறிக்கையின்படி தலாவீத மொத்த நாட்டு வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்துகிறது.

**உலக வங்கி அறிக்கை**

| குறைந்த வருமானமுடைய நாடுகள் | நடுத்தர வருமானம் உடைய நாடுகள் | அதிக வருமானம் உடைய நாடுகள் |
|---|---|---|
| தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $906 மற்றும் அதற்கு குறைவு | தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $906 – $11,115 இடையே உள்ள நாடுகள் | தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $11,116 மேல் உள்ள நாடுகள் |

### புள்ளியியலின் தந்தை



றொனால்டு பிஷர்

கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த தாவரவியல் அறிஞர் றொனால்டு பிஷர் புள்ளியியலில் அடிப்படை நெறிமுறைகளை ஏற்படுத்தினார். அவருடைய புள்ளியியல் ஆய்வுகள் பரிணாம வளர்ச்சியை பகுப்பாய்வு செய்யவும் நவீன மரபியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாகவும் அமைந்துள்ளது.

"புள்ளியியல் என்பது மதிப்பீடுகளை மற்றும் நிகழ்தகவுகளைப் பற்றிய அறிவியல்"

– போடிங்டன்.

"புள்ளியியல் என்பது எண்ணிலான விவரங்களை திரட்டி, ஒருங்கிணைத்து வழங்கி, பகுத்தாய்ந்து, விவரிப்பது ஆகும்"

– கிராக்ஸ்டன் மற்றும் கௌடன்